சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.44/2025 நாள்-27.03.2026

வா.சா.1. மகேந்திரன்

குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்

நான் நிரந்தரமாக இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான் பிரதிவாதிக்கு சொந்த ஊர் சேத்தூர் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வாறு பழக்கம் என்று வழக்கில் கூறவில்லை என்றால் சரிதான் பிரதிவாதியின் அண்ணன் பெயர் செந்தில் குமார் என்றால் எனக்கு தெரியாது அவரது குடும்ப விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி விவசாயம் செய்தும், தேங்காய் வரவு செலவு என்னிடம் பார்த்தார். மொத்த தேங்காய்களை செந்தில்குமார் தேங்காய்பேட்டையில் இருந்து எடுத்து வந்து என்னிடம் விற்பார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே தேங்காய் வியாபாரம் 2014 ம் ஆண்டு வரை தேங்காய் வரவு செலவு இருந்தது அதன் பிறகு இல்லை. அதன் பிறகு எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பழக்கம் இல்லை என்றால் பேச்சு வார்த்தை உண்டு. நான் தற்போதும் மொத்தமாக கொள்முதல் செய்து வடஇந்தியாவில் விற்பனை செய்து வருகிறேன். பிரதிவாதி தற்போதும் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. 2014 ம் ஆண்டிற்கு பிறகும் பிரதிவாதி தனியாக தேங்காய் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான் .2014 ல் எனக்கும் பிரதிவாதிக்கும் வரவு செலவு பிரச்சனை ஏற்பட்டதால் வியாபாரத்தை நிறுத்திவிட்டோம் என்று சொன்னால் அவர் தொடர்ந்து என்னிடம் வியாபாரம் பார்க்காததால் நிறுத்திவிட்டோம். நான் தற்போதும் சேத்தூரில் வேறு நபர்களிடம் தேங்காய் வாங்கி வருகிறேனா என்று கேட்டால் இல்லை. பிரதிவாதி என்னிடம் எந்த கிழமையில் கடன் வாங்கினார் என்றால் கிழமை ஞாபகம் இல்லை. கடன் கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாக மீண்டும் தேங்காய் வரவு செலவு வைத்துக் கொள்வதாக கூறி என்னிடம் கடன் கேட்டார். இந்த கடனை குடும்பச் செலவிற்காகவும் சில்லரை கடனை தீர்ப்பதற்காகவும் வாங்கினார். நான் என்ன குடும்ப செலவு என்று கேட்கவில்லை. கடனுறுதிசீட்டை பிரதிவாதியே எழுதிக் கொண்டு வந்தார். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் வெவ்வேறு மைகளில் வெவ்வேறு நபர்களால் எழுதப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

சரிதான் ஆனால் பிரதிவாதியே எழுதிக் கொண்டு வந்தார். வா.சா.ஆ.1-ல் பிரதிவாதியின் முகவரியில் உள்ள திருப்பதியும், திருப்பதி என்ற எழுத்தும், முத்திரையில் உள்ள கையொப்பத்தில் உள்ள திருப்பதியும் ஒரே எழுத்தாக உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட இரண்டையும் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது பிரதிவாதிக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1- ல் எழுதியதும், சாட்சியும் இல்லை என்றால் சாட்சிகள் உள்ளது, எழுதியவர் பெயர் இல்லை. வா.சா.ஆ.1-ல் கண்ட 2 சாட்சிகளும் இராஜபாளையம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் கண்ட சாட்சிகள் இருவரும் எனக்கு நண்பர்கள். வா.சா.ஆ.1-ல் கண்ட சாட்சிகளை நான் தான் என் வீட்டிற்கு வரச்சொன்னேன் என்றால் தற்செயலாக என் வீட்டிற்கு வந்தார்கள். 2ம் சாட்சிகளும் என் நண்பர் என்பதால் பிரதிவாதியின் கையொப்பத்தை நான் போட்டு வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் 2வதாக எழுதிய கையெழுத்தும், முதலாவது சாட்சியின் கையொப்பமும் ஒரே மையால், ஒரே நபரால் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் உள்ள 1வது சாட்சியின் மூலம் நானும் என் நண்பர்களும் சேர்ந்து மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அவரே எழுதிக் கொண்டு வந்திருந்தால் என் நண்பர் மூலமாக வா.சா.ஆ.1-ஐ எழுதவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ.1- எழுதிக் கொண்டு வரவில்லை என்றால் சரியல்ல. தேங்காய் வியாபாரத்தில் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் வியாபாரம் பார்த்ததால் எனக்கு தொழில் நஷ்டம் ஏற்பட்டது என்றும் எனவே பழி வாங் க வேண்டி மோசடியாக கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் உள்ள கையொப்பத்தை, பிரதிவாதியின் கையொப்பமா என்று நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. 2019ம் ஆண்டிலிருந்து 2021ம் ஆண்டு வரை நான் வட்டி கேட்கவில்லை என்றால் நான் கேட்டும் பிரதிவாதி கொடுக்கவில்லை. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி வாங்கவில்லை என்று சொன்னால் ஒப்புகை அட்டையில் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை. வா.சா.ஆ.3 ல் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்று நான் தற்போது வரை தெரிந்து கொள்ளவில்லை. வா.சா.ஆ.2,3 வழக்கிற்காக என் கையாள் மூலம் உற்பத்தி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பு பிரதிவாதிக்கு சார்பு செய்யப்படாததால் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1-ன் படி பிரதிவாதிஎந்த காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றும் கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.